**செய்தி வெளியீடு எண் : 363** **நாள்: 09.03.2022**

# செய்தி வெளியீடு

## <u>தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் இணைந்து சென்னையில் 8.3.2022 மற்றும் 9.3.2022 ஆகிய நாட்கள் நடத்திய பேரிடர் மேலாண்மை மண்டல அளவிலான கருத்தரங்கம்.</u>

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் இணைந்து சென்னையில் 8.3.2022 மற்றும் 9.3.2022 ஆகிய நாட்களில், 10 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பேரிடர் மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொண்ட மண்டல அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில், மேற்கு வங்கம், ஒடிசா, ஆந்திர பிரதேசம், கேரளா, கர்நாடகா, கோவா ஆகிய 6 மாநிலங்கள், பாண்டிச்சேரி, லட்சத்தீவு, அந்தமான் நிகோபார் தீவுகள், டாமன் டையு மற்றும் நாகர் ஹவேலி ஆகிய 4 யூனியன் பிரதேசங்கள் சார்ந்த பேரிடர் மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பேரிடர் மேலாண்மையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப புதிய முன்னெடுப்புகள், நிறுவன மற்றும் நிதி கட்டமைப்பு, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பின்பற்றப்படும் பேரிடர் மேலாண்மைக்கான சிறந்த வழிமுறைகள், படிப்பினைகள் மற்றும் தொழில்நுட்பம், பேரிடர்களின் போது எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பேரிடர் அபாயக் குறைப்பிற்கான முன்னெடுப்புகள் மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டம் ஆகிய பொருட்கள் குறித்து கருத்தரங்கில் விரிவாக விவாதிக்கப்பட்டன.

தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சிறப்பாக செயல்பட்டு வரும் TNSMART (தமிழ்நாடு), புவி சார் தகவல் அடிப்படையில் பேரிடர் மேலாண்மை (கர்நாடகா), தகவல் தொடர்பு அமைப்பு (ஆந்திர பிரதேசம்) ஆகிய முன்னெடுப்புகளில் மாநிலங்களுக்கிடையே தேவைக்கேற்ப கருத்து பரிமாற்றங்கள்

மேற்கொண்டு எந்த குறிப்பிட்ட தொழில்நுட்பத்தை செயல்படுத்துவது என அந்தந்த மாநிலங்கள் முடிவெடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்களை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து விவாதிக்கப்பட்டு மாநில அரசுகள் இது குறித்து முடிவெடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

கடலோர மாநிலங்கள் முன்னெச்சரிக்கை அமைப்பு கடைக்கோடி மக்களையும் சென்றடையும் வகையில் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக கடல் சீற்றம் குறித்த தகவல்கள் மற்றும் மீனவர்களுக்கான முன்னெச்சரிக்கை செய்திகள் அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் பேரிடர்கள், முக்கியமாக கடல் அரிப்பு தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகள், தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

சென்டாய் கூட்டமைப்பின் பேரிடர் மேலாண்மைக்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்த நிலையில், பேரிடர் இழப்பு குறித்த தரவுகள் விரைவில் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கு உதவிடும் வகையில் உருவாக்கப்பட்ட தேசிய பேரிடர் தகவல் மேலாண்மைத் திட்டத்தில் அனைத்து மாநிலங்களும் முன்னுரிமை அடிப்படையில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இந்தக் கருத்தரங்கம் சிறந்த முறையில் நடத்தப்பட்டது குறித்து தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டனர்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**